டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 28.08.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 059 - Madurai | Online Edition

# ஐநா பாலைவனமாதல் தடுப்பு மாநாட்டில் மேய்ச்சல் நிலங்களை மீட்டெடுக்க இந்தியா அழைப்பு

புது தில்லி, ஆக.27

மங்கோலியாவின் உலான்பாதரில் நடைபெற்ற பாலைவன மாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் 17-வது மாநாட்டில், மேய்ச்சல் நிலங்களை மீட்டெடுப்பதில் உள்ளூர் சமூகங்களின் பங்களிப்பு முக்கியம் என இந்தியா வலியுறுத்தியது.

மேய்ச்சல் நிலங்களை மீட்டெடுப்பதும் கால்நடை மேய்ப்புச் சமூகங்களின் நலனும் என்ற தலைப்பிலான அமைச்சர்கள் கலந்துரையாடலில் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் உரையாற்றினார். கால்நடை மேய்ப்புச் சமூகங்களை வெறும் பயனாளிகளாகக் கருதாமல், இயற்கை வளங்களின் பாதுகாவலர்களாக அங்கீகரிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். பாரம்பரிய அறிவையும் நவீன அறிவியலையும் இணைப்பதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு உகந்த தாகவும், பொருளாதார ரீதியாக பயனுள்ளதாகவும், அனை வரையும் உள்ளடக்கியதாகவும் நில மீட்புப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்றார். இமயமலைப் பகுதிகள், மத்திய இந்தியாவின் புல்வெளிகள், தார் பாலைவனம், கச்ச் மற்றும் தென் இந்தியாவின் சோலா பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு நிலப்பரப்புகளில் இந்தியாவின் மேய்ச்சல் நிலங்கள் பரந்து காணப்படுகின்றன. செயற்கைக்கோள் அடிப்படையிலான வரைபடங்கள், சேதமடைந்த மேய்ச்சல் நிலங் களை அடையாளம் கண்டு மீட்புத் திட்டங்களை வகுக்க உதவுகின்றன. ராஜஸ்தானின் ஓரான் புனித வனப்பகுதிகளை எடுத்துக்காட்டிய அமைச்சர், நாடு முழுவதும் சுமார் 25,000 சமூகப் பாதுகாப்புப் பகுதிகள் 6 லட்சம் ஹெக்டேர் பரப்பில் உள்ளதாக தெரிவித்தார். நிலையான மேய்ச்சல், நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாடு, தீவன வளர்ப்பு, வாழ்வாதார ஆதரவை ஒருங்கிணைத்து இந்தியா செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். மேய்ச்சல் நிலங்களை மீட்டெடுக்க நிதி, தொழில்நுட்பம், அறிவுப் பகிர்வை அதிகரிக்க வேண்டும் என்றும் இந்தியா அழைப்பு விடுத்தது.

# அதிக மகசூல் தரும் 'கோ-51' நெல் ரகம் நடவு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

இராணிப்பேட்டை, ஆக.27

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் வரும் சம்பா பருவ நெல் சாகுபடிக்கு தேவையான சான்று அளிக்கப்பட்ட 'கோ-51' ரக நெல் விதைகள் வாலாஜா வட்டார விரிவாக்க மையத்தில் இருப்பில் உள்ளதாகவும், இதை விவசாயிகள் வாங்கி பயன்பெற வேண்டும் என வாலாஜா வட்டார வேளாண் உதவி இயக்குனர் திலகவதி தெரிவித்துள்ளார்.



கோ-51 என்பது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்பட்ட 105 முதல் 110 நாட்கள் வளர்ச்சி காலம் கொண்ட ஒரு குறுகிய கால, அதிக மகசூல் தரும் மெல்லிய நெல் ரகமாகும். நம்பகமான மற்றும் அதிக உற்பத்தித் திறன் கொண்ட பயிரை நாடும் நெல் விவசாயி களுக்கு ஒரு சிறந்த தேர்வாகும். பல்வேறு வளர்ப்பு சூழல்களுக்கு ஏற்றுத் தழுவிக்கொள்ளும் திறனும், பொதுவான நோய்களுக்கு எதிர்ப்புத் தன்மையும் இருப்பதால், இது நெல் சாகுபடிக்கு நிலைத்தன்மை வாய்ந்த ஒரு தேர்வாகும். ஹெக்டேருக்கு சராசரியாக 6,623 கிலோ (ஏக்கருக்கு சுமார் 2,600 முதல் 2,700 கிலோ வரை) மகசூல் கிடைக்கும்.

நமது இராணிபேட்டை மாவட்டத்தில் சொர்ணவரி, சம்பா மற்றும் நவரை பருவங்களுக்கு மிகவும் ஏற்ற ரகமாகும்.

கணிசமான மகசூலை வழங்கி, விவசாயிகளுக்கு அதிக லாபம் தரும் ஒரு சிறந்த ரகமாகவும், பல நெல் விவசாயிகளின் விருப்பத் தேர்வாகவும் இருந்து வரும் ரகமான 'கோ-51' நெல் விதைகளை வாலாஜா வட்டார விரிவாக்க மையத்தில் வாங்கி பயன்பெற வேளாண் உதவி இயக்குனர் கேட்டுக்கொண்டார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வேளாண்மையில் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை வலுப்படுத்த பயிற்சி



சேலம், ஆக.27

சேலம் மாவட்டம், நங்கவள்ளி வட்டாரம், கோனூர் கிழக்கு கிராமத்தில் வேளாண்மைத்துறை அட்மா திட்டம் சார்பாக விவசாயி களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியை சுகிர்தா வட்டார தொழில்நுட்ப மேலாளர் துவக்கிவைத்து, வேளாண்மைத்துறை திட்டங்களை விளக்கினார். சரவணன், வேளாண்மை அலுவலர், வேளாண் வணிகம், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை வலுப் படுத்த நெறிமுறைகள், செயல்பாடுகள் மற்றும் தொழில் நுட்பங் களை எடுத்துக் கூறினார். உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கான மானியத் திட்டங்களை விளக்கினார். அமைப்பு களுக்கான செயல் திட்டங்கள் எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர், விவசாயிகளுக்கு விடுப்பட்ட நில உட்பிரிவுகள் இணைப்பு செய்துதரப்பட்டது, விவசாயிகள் அனை வருக்கும் ஊக்கத்தொகை மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்பு நிற்வாகிகள் மேற்கொண்டனர்.

# உலக தென்னை தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி

கோவை, ஆக.27

மலை பயிர்கள் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் இணைந்து உலக தென்னை தினம் 2/9/2026 அன்று காலை 9:30 மணி அளவில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற உள்ளது. எனவே அனைத்து தென்னை விவசாயிகளும் இதில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நிகழ்ச்சி நடக்கும் இடம், நிகழ்ச்சியின் விவரங்கள் குறித்து இயக்குனர் தென்னை வளர்ச்சி வாரியம் இத்தளத்தில் பதிவு செய்வார்கள்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**24. இறால் சூப்**

**தேவையான பொருட்கள்**

இறால் – 200 கிராம்

பூண்டு – 2 பல்

மிளகு – ½ டீஸ்பூன்

வெண்ணெய் – தேவைக்கேற்ப

உப்பு – தேவைக்கேற்ப

**செய்முறை**

இறாலை வதக்கி தண்ணீர் சேர்த்து 10 நிமிடம் கொதிக்கவிட்டு பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# விதைப்பரிசோதனை மூலம் தரமான விதைகளை தேர்வு செய்யலாம்!

கன்னியாகுமரி, ஆக.27

விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் கீழ் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் விதைப் பரிசோதனை ஆய்வகம் இயங்கி வருகிறது. இங்கு விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்களிடமிருந்து மூன்று விதமான விதைமாதிரிகள் பெறப்பட்டு விதைப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

**சான்று விதை மாதிரிகள்**

சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்ய விரும்பும் விவசாயிகள் தங்கள் விதைப்பண்ணைகளை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்பட்ட விதைப் பண்ணைகளில் ஒவ்வொரு பயிருக்கும் நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் விதைச்சான்று அலுவலரால் வயல் ஆய்வு செய்யப்படுகிறது. வயல் ஆய்வுகளில் தேரிய விதைப்பண்ணைகள் அறுவடை செய்யப்பட்டு முன்சுத்தி செய்யப்படுகிறது. பிறகு வெயிலில் உலர்த்தப்படுகிறது. விதைக் குவியல்கள் ஆய்வு செய்யப்பட்டு விதை சுத்தி நிலையத்தில் சுத்தி பணி மேற்கொள்ளப்படுகிறது. சுத்தி செய்யப்பட்ட விதைக்குவியல் களிலிருந்து விதைச்சான்று அலுவலரால் மாதிரிகள் எடுக்கப்பட்டு விதைப் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்படுகிறது. விதைப் பரிசோதனையில் தேர்ச்சி பெறும் விதைக் குவியல்கள் சான்று செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்படுகிறது.

**ஆய்வாளர் விதை மாதிரி**

அனைத்து விதை விற்பனை நிலையங்களிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள விதைகளின் தரத்தை தெரிந்து கொள்ள விதை தரக்கட்டுபாட்டில் பணிபுரியும் விதை ஆய்வாளர்களால் விதை மாதிரிகள் எடுத்து அனுப்பப்படுகிறது. இவ்விதைமாதிரிகளில் புறத் தூய்மை, முளைப்புத்திறன் போன்ற பரிசோதனைகள் செய்யப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகிறது. தேர்ச்சி பெறாத விதைக்குவியல்கள் விற்பனைக்கு தடை விதிக்கப்படுவதோடு துறை ரீதியாக மற்றும் நீதிமன்ற நடவடிக்கை எடுக்க ஏதுவாகிறது.

**பணி விதை மாதிரி**

விவசாயிகள், விதை விற்பனையாளர்கள், விதை உற்பத்தி யாளர்கள் தங்களிடம் உள்ள விதையின் தரத்தினை அறிய விதை

மாதிரியுடன் விதைப் பரிசோதனை கட்டணமாக ரூ.80/- செலுத்த வேண்டும். விதைமாதிரியுடன் அதன் பயிர், ரகம், குவியல் எண் மற்றும் தேவைப்படும் பரிசோதனை அனுப்புநரின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண்ணுடன் தபால் மூலமாகவோ, அல்லது நேரிலோ விதை மாதிரியை கொடுத்து பயன்பெறுமாறு கன்னியாகுமரி விதைப்பரிசோதனை ஆய்வக மூத்த வேளாண்மை அலுவலர் ஜி. அஸ்ரப் முகைதீன் கேட்டுக் கொண்டுள்ளார். விதை மாதிரி அனுப்ப வேண்டிய முகவரி : விதைப்பரிசோதனை ஆய்வகம், லூர்து அன்னை சாலை, ஜெஸந்த் மஹால் பின்புறம், புன்னைநகர், நாகர்கோவில்- 629 004.

# மண்வள மேலாண்மை பயிற்சி



மதுரை, ஆக.27

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி வட்டாரம், வேளாண்மை துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் மண்வள மேலாண்மை குறித்து மாவட்ட அளவிலான உழவர் பயிற்சி தும்பைப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது. பயிற்சியில் மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைவர் முனைவர் கி.சுரேஷ், கலந்து கொண்டு மண்வள மேலாண்மை, இயற்கை வேளாண்மை, நஞ்சில்லா உணவு உற்பத்தி முறை மற்றும் பயறு வகைப் பயிர்களை பயிரிடுவதன் முக்கியத்துவம் குறித்தும் உழவர்களுக்கு தொழில் நுட்ப உரையாற்றினார். கொட்டாம்பட்டி வேளாண்மை உதவி இயக்குனர் வளர்மதி, பயிற்சிக்கு தலைமை ஏற்று வேளாண் திட்டங்கள், மண் மாதிரி சேகரிக்கும் தொழில்நுட்பங்கள் மற்றும் இயற்கை உரப் பயன்பாடு குறித்து உரையாற்றினார். இப்பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் ரகுராமன், உதவி வேளாண்மை அலுவலர் வெங்கடேஷ், வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜதுரை, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கண்ணன், சத்திய கீர்த்தனா, முன்னோடி விவசாயி பாலமுருகன், கேசவன் மற்றும் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# உயிரியல் – இயக்க கரிம உரம்

# இயற்கை வளங்களை உரமாக்கும் சிறந்த முயற்சி

திண்டுக்கல், ஆக.27

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் B.Sc. (Hons.) வேளாண்மை இறுதியாண்டு பயிலும் மாணவர் களான பா.ரோகன், க.கோகுல் சதுர்வேதி, மூ.குணால், பா.ரோஹித் ராஜ், கை.ந.கவுரேஷ், பா.பத்மநாபஹரி மற்றும் சுதிர் ரெட்டி ஆகிய






நாங்கள், RAWE (Rural Agricultural Work Experience கிராமப்புற வேளாண் பணி அனுபவம்) திட்டத்தின் ஒரு பகுதியாக, கிழக்கு இராசப் பட்டியில் உள்ள மணிகண்டன் பண்ணையில் உயிரியல் – இயக்க கரிம உரம் (Biodynamic Organic Manure) தயாரிப்பு மற்றும் அதன் பயன் பாடுகளைப் பற்றி கள அனுபவம் பெற்றோம்.

**உயிரியல்–இயக்க கரிம உரம் என்றால் என்ன?**

உயிரியல்–இயக்க வேளாண்மை (Biodynamic Agriculture) என்பது மண், தாவரம், கால்நடை மற்றும் பண்ணை வளங்களை ஒருங்கிணைத்து, இயற்கைச் சுழற்சிகளைப் பயன்படுத்தி மண் வளத்தை மேம்படுத்தும் ஒரு நிலையான வேளாண்மை அணுகு முறையாகும். இதில் பண்ணையில் கிடைக்கும் நாட்டுப் பசு மாட்டுச்சாணம், தாவரக் கழிவுகள், நீர் மற்றும் பிற இயற்கைப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இம்முறையின் முக்கிய நோக்கம் மண்ணில் கரிமப் பொருள் மற்றும் உயிரியல் செயல்பாட்டை மேம்படுத்தி, பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதாகும்.

**மணிகண்டன் பண்ணையில் பயன்படுத்தப்பட்ட முக்கியப் பொருட்கள்**

கிழக்கு இராசப்பட்டியில் நடைபெற்ற களப்பயிற்சியில் உயிரியல்–இயக்க கரிம உரம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்கள் குறித்து அறிந்து கொண்டோம்.

- நாட்டுப் பசு மாட்டுச்சாணம்  முக்கிய கரிமப் பொருள்
- முட்டை ஓடு இயற்கையான கால்சியம் மூலப்பொருள்
- நீர்  ஈரப்பதத்தைப் பராமரிக்க
- பசுந்தழை மற்றும் இலைக் கழிவுகள்
- பயிர் மற்றும் பண்ணைக் கழிவுகள்
- நன்கு மக்கிய கரிம உரம்
- மண் தேவைக்கேற்ப
- மரச் சாம்பல் தேவைக்கேற்ப
- உயிரியல்–இயக்கத் தயாரிப்புகள் முறைக்கு ஏற்ப பயன் படுத்தப்படலாம்

குறிப்பு : முட்டை ஓடு இயற்கையான கால்சியம் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படலாம். இது Biodynamic முறையின் குறிப்பிட்ட தயாரிப்புகளுக்கு மாற்றாகக் கருதப்படக்கூடாது.

**உரம் தயாரிக்க பொதுவாகத் தேவையானவை**

1. நிழலான இடத்தில் அமைக்கப்பட்ட உரக்குழி/குழி
2. நாட்டுப் பசு மாட்டுச்சாணம்
3. தாவரக் கழிவுகள் மற்றும் உலர்ந்த இலைகள்
4. பசுந்தழை
5. முட்டை ஓடு
6. சுத்தமான நீர்
7. மண் அல்லது பழைய மக்கிய உரம்
8. மண்வெட்டி அல்லது கடப்பாரை
9. வாளி மற்றும் நீர் தெளிப்பான்
10. உரத்தை மூடுவதற்கான இலைகள் அல்லது பொருத்தமான மூடுபொருள்

**தயாரிக்கும் முறை**

முதலில் நிழலான, நீர் தேங்காத இடத்தில் உரக்குழி அல்லது குழி தயார் செய்யப்படுகிறது. அதன் அடிப்பகுதியில் உலர்ந்த இலைகள் மற்றும் தாவரக் கழிவுகள் இடப்படுகின்றன. அதன் மேல் நாட்டுப் பசு மாட்டுச்சாணம் மற்றும் பிற கரிமப் பொருட்கள் அடுக்குகளாக சேர்க்கப்படுகின்றன.

முட்டை ஓடுகளை நன்கு கழுவி உலர்த்தி, சிறு துண்டுகளாக அல்லது பொடியாக்கி தேவைக்கேற்ப கரிமப் பொருட்களுடன் சேர்க்கலாம். பின்னர் தேவையான அளவு நீர் தெளித்து ஈரப்பதம் பராமரிக்கப்படுகிறது.

உரக்குழியில் உள்ள பொருட்கள் நன்றாக கலந்து மக்குவதற்கு அவ்வப்போது கிளறி விடப்படுகின்றன. போதுமான காலத்திற்குப் பிறகு கரிமப் பொருட்கள் மக்கி, கருமையான நிறம், மிருதுவான அமைப்பு மற்றும் இயற்கையான மண்வாசனை கொண்ட உரமாக மாறுகின்றன.

**பரிந்துரைகள்**

– நன்கு மக்கிய உரத்தையே பயிர்களுக்கு பயன்படுத்த வேண்டும்.
– மாட்டுச்சாணம் நாட்டுப் பசுவிலிருந்து பெறப்பட்டதாகவும், தேவையற்ற இரசாயனக் கலப்புகள் இல்லாததாகவும் இருப்பது சிறந்தது.
– உரக்குழியில் அதிகப்படியான நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
– போதுமான ஈரப்பதம் தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும்.
– உரத்தை நேரடி வெயிலில் நீண்ட நேரம் வைக்காமல் நிழலில் பாதுகாப்பது நல்லது.

– பயிரின் தேவைக்கு ஏற்ப உரத்தின் அளவை நிர்ணயிக்க வேண்டும்.

– மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் ஊட்டச்சத்து மேலாண்மை மேற்கொள்வது சிறந்தது.

– யஷ்லி தீஜழிதுஷ்உ முறையின் குறிப்பிட்ட யம் தயாரிப்புகளைப் பயன்படுத்தினால், அங்கீகரிக்கப்பட்ட முறைகள் மற்றும் பரிந்துரைகளைப் பின்பற்ற வேண்டும்.

**உயிரியல்–இயக்க கரிம உரத்தின் பயன்பாடுகள்**

**மண்ணிற்கு**

– மண்ணில் கரிமப் பொருளை அதிகரிக்க உதவுகிறது.
– மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துகிறது.
– மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனை மேம்படுத்த உதவுகிறது.
– மண்ணில் நன்மை தரும் நுண்ணுயிர்களின் செயல்பாட்டை ஊக்குவிக்கிறது.

பயிர்களுக்கு

– ஊட்டச்சத்துக்கள் கிடைப்பதை மேம்படுத்த உதவுகிறது.
– ஆரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
– பயிர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஆதரிக்கிறது.
– இயற்கை மற்றும் நிலையான பயிர் உற்பத்திக்கு உதவுகிறது.

**விவசாயிகளுக்கு**

– பண்ணையில் கிடைக்கும் கழிவுகளை பயனுள்ள உரமாக மாற்ற முடிகிறது.
– வெளிப்புற உர உள்ளீடுகளின் தேவையைக் குறைக்க உதவுகிறது.
– பண்ணை வளங்களை மறுசுழற்சி செய்ய உதவுகிறது.
– நீண்டகால மண் வளப் பாதுகாப்பிற்கு உதவுகிறது.

**நிலையான வேளாண்மைக்கான ஒரு முயற்சி**

மணிகண்டன் பண்ணையில் நடைபெற்ற இந்தக் களப் பயிற்சியின் மூலம், பண்ணையில் கிடைக்கும் மாட்டுச்சாணம், தாவரக் கழிவுகள் மற்றும் பிற இயற்கைப் பொருட்களை வீணாக் காமல், அவற்றை மதிப்புமிக்க கரிம உரமாக மாற்ற முடியும் என்பதை அறிந்து கொண்டோம்.

உயிரியல்–இயக்க கரிம உரத் தயாரிப்பு, மண் வளத்தைப் பாதுகாப்பதுடன், பண்ணைக் கழிவுகளின் மறுசுழற்சிக்கும் வழி வகுக்கிறது. இது இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, எதிர்கால தலைமுறைகளுக்கான நிலையான வேளாண்மையை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**எங்கள் RAWE அனுபவம்**

கிழக்கு இராசப்பட்டியில் உள்ள மணிகண்டன் பண்ணையில் நடைபெற்ற இந்த நடைமுறைப் பயிற்சி, புத்தகங்களில் கற்ற உயிரியல் மற்றும் கரிம வேளாண்மை கருத்துகளை நேரடியாகக் களத்தில் புரிந்து கொள்ள எங்களுக்கு உதவியது. குறிப்பாக, நாட்டுப் பசு மாட்டுச்சாணம் மற்றும் பண்ணைக் கழிவுகளின் முக்கியத்துவம், உரம் தயாரிக்கும் முறைகள், ஈரப்பதப் பராமரிப்பு மற்றும் உரத்தின் பயன்பாடுகள் குறித்து நடைமுறை அறிவைப் பெற்றோம்.

இந்த அனுபவம், பண்ணையில் கிடைக்கும் கழிவு என்பது கழிவு அல்ல; சரியான முறையில் பயன்படுத்தினால் அது வளம் என்ற கருத்தை எங்களுக்கு உணர்த்தியது.

**முடிவுரை :** உயிரியல்–இயக்க கரிம உரம் என்பது இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மண் வளத்தையும் பண்ணையின் நிலைத்தன்மையையும் மேம்படுத்தும் ஒரு பயனுள்ள அணுகு முறையாகும். நாட்டுப் பசு மாட்டுச்சாணம், தாவரக் கழிவுகள், நீர் மற்றும் பிற இயற்கைப் பொருட்களை முறையாகப் பயன் படுத்துவதன் மூலம் விவசாயிகள் தங்கள் பண்ணை வளங்களை மறுசுழற்சி செய்து மண் வளத்தைப் பாதுகாக்க முடியும்.

# எடப்பாடி வட்டாரத்தில் வேளாண்மை இணை இயக்குனர் கள ஆய்வு



சேலம், ஆக.27

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில், விவசாயிகள் விவரங்கள் பதிவு செய்தல் மற்றும் டிஜிட்டல் பயிர் சர்வே பணிகளின் முன்னேற்றம் குறித்த முக்கிய களஆய்வு வேளாண்மை இணை இயக்குநரால் மேற்கொள்ளப்பட்டது. எடப்பாடி வட்டாரத்திற்கு உட்பட்ட கிராமங்களில் நடைபெற்று வரும் டிஜிட்டல் பயிர் சர்வே பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து நிலுவையில் உள்ள விவசாயிகள் பதிவுப் பணிகளை காலவரையறைக்குள் விரைந்து முடிக்குமாறு களப் பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் இவ்வாய்வில் எடப்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) பூங்கொடி, உதவி வேளாண்மை அலுவலர் சந்தோஷ் அட்மா திட்டப் பணியாளர்கள் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மரபணு மாற்றம், மரபணு திருத்தம் என்றால் என்ன?



மரபணு மாற்றம் மரபணு திருத்தம் ஆகிய இரண்டுமே ஒரு தாவரத்தின், டி.என்.ஏ.வில் திருத்தம் செய்வதை அடிப்படையாகக் கொண்டவை தான்.

**1) மரபணு மாற்றம் (GENETIC MODIFICATION)**

G.M CROPS என்பது ஒரு உயிரினத்தின் D.N.A அமைப்பில், அறிவியல் தொழில்நுட்பம் மூலம் நேரடி மாற்றங்களை செய்து, விரும்பிய புதிய குணாதிசயங்கள் உருவாக்குவதாகும். இது தாவரங்கள், விலங்குகள்/நுண்ணுயிரிகளில் புதிய பயன்களை பெற பயன்படுகிறது. எடுத்துக்காட்டாக B.T COTTON-யில் பாக்டீரியாவிலிருந்து, பெறபட்ட மரபணுக்கள் சேர்க்கபட்டன.

**2) மரபணுத் திருத்தம் (GENE EDITING)**

தாவரத்தில் ஏற்கனவே உள்ள ஒரு மரபணுவில் குறிப்பிட்ட அளவுக்கு மாற்றம்/திருத்தம் செய்யப்படுகிறது. புதியதாக வேறு எந்த உயிரினத்தின் மரபணுவும் சேர்க்கப்படுவதில்லை, இது SDN1, SDN2, STN3 என பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப் படுகிறது. இதில் CRTSPRGAS-9 BOSE EDITING, PRIME EDITING, என நிலைகள் உள்ளன.

**உலகளவில் மரபணு திருத்தம் செயல்பாட்டில் உள்ளதா?**

சுமார் 60 நாடுகளில், 70க்கு மேற்பட்ட தாவரங்களில் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றன. சீனா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா நாடுகள் இதில் முனனணியில் உள்ளன.

அமெரிக்காவும் கனடாவும் மரபணு திருத்தப்பட்ட உருளைக் கிழங்கு, சோயாபீன்ஸ் பயிரிட அனுமதித்துள்ளன, சுருக்கமாக சொல்லுவதென்றால் இந்த மரபணு திருத்தப்பட்ட நெல் ரகங் களான நமது இந்தியாவில், AV நெல், டி.எஸ்டி 1, டி.ஆர்.ஆர் தான் 100 (கமலா) நாட்டின் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதோடு, காலநிலை மாற்றத்திற்கிடையே விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் ஒரு மைல் கல்லாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து விவசாயிகள் பயிற்சி



சேலம், ஆக.27

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரம், மேட்டுப்பட்டி தாதனூர் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணையம் என்ற தலைப்பில் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.சண்முகப்பிரியா தலைமையில் நடைபெற்றது.

பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வி, விவசாயிகளை வரவேற்று அட்மா திட்டம் குறித்து விளக்கம் அளித்தார். தர்மபுரி மாவட்டம் மரபு வழி பண்ணை ஆசிரியர் சஞ்சீவ பெருமாள் பயிற்சியாளராக கலந்து கொண்டு ஒருங்கிணைந்த பண்ணைய த்தின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம், ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கிய கூறுகளான பயிர் சாகுபடி, தோட்டக்கலை பயிர்கள் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, தேனி வளர்ப்பு, மீன் வளர்ப்பு பற்றியும் பயிற்சி வழங்கினார். மண் பரிசோதனை, மண்வள அட்டைகள், இயற்கை விவசாயம், உரங்களின் சமச்சீரான பயன்பாடு மற்றும் நீர் சேமிப்பு நுட்பங்கள் பசுந்தாள் உரம் இடுதல் மற்றும் விவசாய அடையாள எண் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சியில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, இன கவர்ச்சி பொறி, மண்புழு உரம் தயாரித்தல், இயற்கை விவசாய முறைகளில் பஞ்சகவ்யம் தயாரித்து பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

மண் மாதிரி எடுத்தல் மற்றும் உயிர் உர விதை நேர்த்தி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

விவசாயிகள் அடையாள எண் பதிவு செய்வதன் முக்கியத் துவம் குறித்து துணை வேளாண்மை அலுவலர் மா.பிரபாகரன்

விளக்கம் அளித்து, துறையின் மானியங்கள் குறித்து இளநிலை ஆய்வாளர் கலைமதி, உதவி பொறியாளர் சங்கர், கால்நடை ஆய்வாளர் ஜெயவேல் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் துறை சார்ந்த மானிய திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர். விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் தமிழ்ச்செல்வி நன்றி உரை வழங்கினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்களான செல்வி, தமிழ்ச்செல்வி மற்றும் சக்கரவர்த்தி உதவி தொழில் நுட்ப மேலாளர் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.



# மொடக்குறிச்சி வட்டாரத்தில் அங்கக சான்றிதழ் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்த விவசாயிகள் பயிற்சி




ஈரோடு, ஆக.27

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் ஈஞ்சம்பள்ளி கிராமத்தில் உள் மாவட்ட அளவில் அங்கக சான்றிதழ் பெறுவதற்கான வழிமுறைகள் என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு 27.08.26 அன்று பயிற்சி அளிக்கப்பட்டது. க.பிரசாத், வேளாண்மை உதவி இயக்குநர், மொடக்குறிச்சி, தலைமை தாங்கி பசுந்தாள் பயிர்களின் மூலம் மண்வளத்தை மேம்படுத்துதல் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்து அங்கக உரங்களை பயன்படுத்துதல், மேலும் உயிர் உரங்களின் பயன்கள் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். முத்துவிக்ரம், முன்னோடி விவசாயி, இயற்கை வேளாண்மை குறித்தும் இயற்கை வேளாண் இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகள் (பஞ்சகாவ்யா, அமிர்த கரைசல், ஜுவாமிர்தம் மற்றும் மீன் அமிலம்) மற்றும் பயிர் சுழற்சி, பூச்சி, களை மேலாண்மை முறைகள் குறித்து தெளிவாக விளக்கினார். பாலகிருஷ்ணன், உதவி விதை அலுவலர், மொடக்குறிச்சி, அங்கக பண்ணை அமைப்பது, பதிவு செய்தல் மற்றும் விதை நேர்த்தி மற்றும் அங்கக பண்ணை ஆய்வு செய்வது குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக கூறினார். சபரீஷ், உதவி வேளாண்மை அலுவலர், மொடக்குறிச்சி, வேளாண்மைத் துறை மானியத் திட்டங்கள் மற்றும் நுண்ணீர் பாசனம் குறித்து விளக்கினார். அ.பிரதீப்குமார், வட்டார தொழில் நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி, உழவன் செயலி மற்றும் இநாம் குறித்தும் பதிவு செய்யும் முறைகள் பற்றி கூறினார். விஜயகுமார், உதவி தொழில்நுட்ப மேலாளர், விவசாய அடையாள எண் பதிவு செய்தல் குறித்து கூறினார். பொ.லட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி நன்றியுரை கூறினார்.

# தங்கப்பவுடையான் பட்டியில் கிராம மக்களின் முன்னிலையில் மரக்கன்றுகள் நடும் முயற்சி



தஞ்சாவூர், ஆக.27

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த B.Sc. (ஹானர்ஸ்) வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் தனுஷ்யா, கீர்த்தனா, ஜீவிதா, பிரதீபா, அகல்யா மற்றும் ஷப்னா ஆகியோர், தங்களது கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சியின் (RAWE) ஒரு பகுதியாக, தஞ்சாவூர் மாவட்டம் தங்கப்பவுடையான் பட்டியில் உள்ள குளத்தின் அருகே கிராம மக்களின் முன்னிலையில் மரக்கன்றுகளை நட்டனர்.

கிராமத்தின் நலன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சியில், குளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும், மரங்களின் முக்கியத்துவம், பசுமைப் பரப்பை அதிகரித்தல், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு ஆகியவற்றின் அவசியம் குறித்து கிராம மக்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. மரக்கன்றுகளை தொடர்ந்து பராமரித்தல், முறையாக நீர் வழங்குதல் மற்றும் அவற்றைப் பாதுகாப்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கிராம மக்களின் நலனையும், சுற்றுச்சூழலின் நலனையும் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சி, அனைவரின் பங்களிப்புடன் பசுமையான மற்றும் ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதற்கான ஒரு சிறந்த முயற்சியாக அமைந்தது.

# வேளாண்மை கல்லூரிக்கு திருவரம்பூர் வட்டார விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா



திருச்சி, ஆக.27

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டாரத்தில் வேளாண் துறையின் மூலம் செயல்படும் அட்மா திட்டத்தின் கீழ் சமச்சீர் உர பயன்பாடு என்ற தலைப்பின் கீழ் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நவலூர் குட்டப்பட்டிற்க்கு கண்டுணர்வு சுற்றுலாவிற்காக 50 விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். இப்பயணத்தினை வேளாண் உதவி இயக்குனர் சுகன்யாதேவி தொடங்கி வைத்தார்.

பயிற்சியில் மண்ணியல் துறை உதவி பேராசிரியர் விஜயகுமார் கலந்து கொண்டு கலந்து சமச்சீர் உர மேலாண்மை என்பது பயிரின் தேவை,மண்ணின் வளம் மற்றும் தட்பவெப்ப நிலை போன்றவற்றுக்கு ஏற்ப தழைச்சத்து, சாம்பல் சத்து, மணிச்சத்து மற்றும் நுண்ணூட்ட சத்துக்களை சரியான விகிதத்தில் சரியான நேரத்தில் சரியான முறைகளில் பயன்படுத்தும் வழிமுறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். மேலும் மண்வளத்திற்கு ஏற்ப கரிம உரங்கள், உயிர் உரங்கள் ரசாயன உரங்கள் போன்றவற்றை தேவைக்கேற்ப மற்றும் மண் பரிசோதனை முடிவுகள் மற்றும் மண்வள அட்டையின் பரிந்துரைகளின் படி பயன்படுத்த வேண்டும். இதனால் மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் மேம்படும். அதன் மூலம் தரமான மற்றும் அதிக விளைச்சல் கிடைக்கும். தேவையற்ற உரங்களின் பயன்பாடுகள் தவிர்க்கப் படுவதால் விவசாயிகளுக்காகும் செலவு குறையும் என்று விவசாயி களுக்கு தெளிவாக எடுத்து கூறினார். உழவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் ரமேஷ் கலந்து கொண்டு பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள் இடுவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில் தழைச்சத்து மண்ணில் அதிகரிக்கலாம் என்றும் களை மேலாண்மை, நீர் மேலாண்மை மற்றும் சொட்டு நீர் பாசனத்தின் முக்கியத்துவத்தை பற்றியும் விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுபாதேவி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பாபு செய்திருந்தனர்.

# பல் அடுக்கு விவசாயம்-கண்டுணர் சுற்றுலா ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்

திருச்சி, ஆக.27

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டார விவசாயிகள் இயற்கை வேளாண்மை மற்றும் பல் அடுக்கு விவசாயம் என்ற தலைப்பில் 5 நாட்கள் 31.08.26 முதல் 04.09.26 வரை 20 நபர்களுக்கு கண்டுணர்வு சுற்றுலா பெங்களூர் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இன்று (28.8.26) முன்பதிவு செய்யும் விவசாயிகள் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் ஆதார் நகல் உடன் நேரிலோ அல்லது கைபேசி எண்கள் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரி செல்வன் - 88384 59303, உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் - 99768 34264, தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்கள் கைபேசி எண்களை தொடர்பு கொண்டு பயன்பெற லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சத்தியப்பிரியா தெரிவித்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# காவிரி நீர்ப்பாசனப் பகுதியின் பயிர் சாகுபடிக்கான நவீன வேளாண் இயந்திரங்கள்

தமிழ்நாட்டின் அரிசிக் களஞ்சியம் என அழைக்கப்படும் காவிரி டெல்டா பகுதி, மாநிலத்தின் வேளாண்மை வளர்ச்சிக்கும் உணவுப் பாதுகாப்பிற்கும் முதுகெலும்பாக விளங்குகிறது. காவிரி ஆற்றின் கிளை நதிகள் பாயும் இந்தப் பகுதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கியதாகும். சுமார் 14–15 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் வேளாண்மை நடைபெறும். இந்த டெல்டா பகுதியில் வளமான அலுவியல் மண், போதிய பாசன வசதி மற்றும் உகந்த காலநிலை காணப்படுகிறது. இப்பகுதியில் நெல் முக்கிய பயிராக இருந்து, ஆண்டுக்கு இரண்டு முதல் மூன்று போகங்கள் வரை பயிரிடப்படுகிறது. இதனுடன் கரும்பு, வாழை, பருத்தி, உளுந்து, பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் காய்கறிகளும் குறிப்பிடத்தக்க பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. குறிப்பாக தமிழ்நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் பெரும் பங்கினை காவிரி டெல்டா பகுதி வழங்குகிறது. இத்தகைய சூழலில், விதைப்பு, நாற்று நடவு, களை கட்டுப்பாடு, அறுவடை போன்ற பணிகளை சரியான நேரத்தில் செய்ய வேலையாட்களை மட்டுமே சார்ந்திருப்பது கடினமாகிறது. வேலைவாய்ப்பு குறைவு, கூலி உயர்வு மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் இயந்திரமயமாக்களின் அவசியத்தை மேலும் அதிகரிக்கின்றன. அதுமட்டுமின்றி உற்பத்தி திறனை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மொத்தத்தில், தமிழ்நாட்டின் டெல்டா பகுதிகளில் வேளாண் இயந்திரமயமாக்கள் என்பது விவசாயத்தின் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முக்கிய கருவியாகும். காவிரி டெல்டா பயிர் சாகுபடிக்கேற்ற பண்ணை கருவிகள் மற்றும் இயந்திரங்கள் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

### 1. லேசர் மூலம் சேற்றுழவு சமன் செய்யும் இயந்திரம்

லேசர் ஒளிக்கற்றை தொழில்நுட்பத்தின் உதவியுடன் சேற்று வயலை மிகத்துல்லியமாக சமப்படுத்த இவ்வியந்திரம் பயன் படுகிறது. இந்த இயந்திரம் நிலத்தை சமப்படுத்துவதோடு மட்டு மல்லாது, அடிமண் இறுக்கத்தையும் கட்டுப்படுத்துகிறது. மேலும், இது வயலின்



நீர்மட்டத்தை ஒரே சீராக பராமரிக்கக் உதவுகிறது. வயல் முழுவதும் நீர் ஒரே அளவில் பரவுவதால் நீர் வீணாகும் அபாயம் குறைந்து, மொத்த நீர் தேவையும் கணிசமாக குறைகிறது. குறிப்பாக நாற்று நடவு செய்யும் போது, சீரான நடவு ஆழத்தை உறுதி செய்கிறது. இவ்வியந்திரத்தை இயக்க 45-க்கும் மேற்பட்ட குதிரைத்திறனுள்ள டிராக்டர் பொருத்தமானதாகும். இவ்வியந்திரத்தின் மூலம் நாளொன்றுக்கு 0.4 ஹெக்டேர் வரை நிலத்தைச் சமப்படுத்தலாம். இவ்வியந்திரத்தி விலை ரூ.75,000/- (இணைப்பு மட்டும்) ஆகும்.

## 2. நெல் நாற்று நடவு இயந்திரம்



இந்த இயந்திரம் ஆறு வரிசை மற்றும் எட்டு வரிசை என இரண்டு விதங்களில் கிடைக்கிறது. இந்நடவு செய்யும் இயந்திரத்தில் முன்னோக்கி செல்வதற்கு இரண்டு கியரும். பின்னோக்கி செல்ல ஒரு கியரும் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் வளைவுகளில் சுலபமாக திருப்பும் பவர் ஸ்டிரிங்கும் பொருக்கப்பட்டுள்ளது. மேலும் நான்கு, சக்கரங்களுக்கும் சக்தி செல்வதால் அனைத்து வகையான சேற்று வயலுக்கும் ஏற்றது. இந்த இயந்திரத்தைக் கொண்டு இரு வரிசைகளுக்கான இடைவெளியை 300 மி.மீ. ஆகவும், நாற்றுக்கு நாற்று இடைவெளியை 130 முதல் 280 மி.மீ வரை தேவைக்கு ஏற்பவும் மாற்றி அமைத்துக் கொள்ளலாம். நாற்றுக்களை 8 முதல் 40 மி.மீ ஆழத்தில் நடலாம். மேலும் நாற்று நடும் ஆழத்தை. எல்லா வரிசையிலும் சீராக பராமரிக்க தானியங்கி ஆழ கட்டுப்படுத்துவானும் மற்றும் எல்லா வரிசைகளிலும் தானியங்கி சமப்படுத்துவானும் பொருத்தப்பட்டு உள்ளன. இந்த நாற்று நடவு செய்யும் இயந்திரத்திற்கு, என தனியாக தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக் தட்டுகளில் வளர்க்கப்பட்ட நாற்றுகளைத் தான் பயன்படுத்த வேண்டும். ஆறு வரிசை நடவு இயந்திரத்தைப் பயன்படுத்தி. ஒரு நாளில் சுமார் 3 எக்டர் வரை நடவு செய்யலாம். இந்த இயந்திரத்தின் விலை ரூ.12,00,000 ஆகும்.

## 3. கரும்பு கரணை நடவு இயந்திரம்



டிராக்டரால் இயங்கும் கரும்பு கரணை நடவு இயந்திரம், சால் அமைத்தல், கரும்புக் கரணைகள் வெட்டுதல், அடி உரம் இடுதல், பூஞ்சைக்கொல்லி இட்டு மூடுதல் முதலான அனைத்து வேலைகளையும், ஓரே நேரத்தில் செய்து முடிக்கிறது. இவ்வியந்திரத்தால் 35 செ.மீ. முதல் 40 செ.மீ. நீளம் வரை வெட்டப்படும் கரும்பு கரணைகளை 3 அல்லது 4 அல்லது 5 அடி இடைவெளியில் இரண்டு வரிசைகளில் நடவு செய்யலாம். நாள் ஒன்றுக்கு 3.5 எக்டரில் கரும்பு நடவு செய்யலாம்.

இந்த இயந்திரத்தை உபயோகப்படுத்துவதன் மூலம் கரும்பு நடுவதில் வேலையாட்களின் தேவை 80 விழுக்காடு குறைகிறது. 50 விழுக்காடு பணமும் மிச்சமாகிறது. இந்த இயந்திரத்தின் விலை ரூ. 2,25,000 ஆகும்.

**4. டிராக்டரால் இயங்கும் துல்லிய முறையில் விதை விதைக்கும் இயந்திரம்**



துல்லிய முறையில் விதை விதைக்கும் இந்த இயந்திரமானது 35 முதல் 45 வரை குதிரைத்திறன் கொண்ட டிராக்டரால் இயக்கப்படுகிறது. இந்த இயந்திரத்தின் மூலம் உளுந்து, பயறுவகைகள், பருத்தி போன்ற விதைகளை சீரான இடைவெளியில் ஒரே நேரத்தில் இரு வரிசைகளில் விதைக்க முடியும். வரிசை மற்றும் விதைகளுக்கு இடைப்பட்ட இடைவேளியை 45 செ.மீ. முதல் 90 செ.மீ. வரை மாற்றிக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இயந்திரத்தின் மூலம் நாளொன்றுக்கு 2.2 எக்டர் வரை விதை விதைக்கலாம். இந்த இயந்திரத்தின் விலை ரூ.4,50,000 ஆகும்.

**5. டிராக்டரால் இயங்கும் இரு வரிசையில் திசு வளர்ப்பு வாழை நாற்று நடும் இயந்திரம்**



திசு வளர்ப்பு வாழை நாற்று மூலம் செய்யப்படும் சாகுபடி வழக்கமான வாழை அடி வாழை சாகுபடி முறையை காட்டிலும் 2 முதல் 3 மடங்கு வரை அதிக மகசூல் தருகின்றது. பல திசு வளர்ப்பு ரகங்கள் இருந்தாலும் அவற்றில் ஜி-9 ரகம் அதன் நீண்ட அடுக்கு வாழ்க்கை மற்றும் சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ள கூடிய கவரும் மஞ்சள் நிறம் போன்ற காரணிகளால் அதிகம் விரும்பப் படுகின்றது. ஊளி வகை அமைப்பு மூலம் 30 செ.மீ. ஆழசால் அமைக்கப்பட்டு சால் அகலப்படுத்தும் அமைப்பு மூலம் 20 செ.மீ. ஆழம் வரை 120 மி.மீ-க்கு அகலப்படுத்தப்பட்டது. இந்த இயந்திரத்தின் மூலம் 1.5 மீ இடைவெளியில் இரு வரிசையில் நாளொன்றுக்கு 2.5 எக்டர் வரை நடலாம். இந்த இயந்திரத்தைக் கொண்டு ஒரு எக்டரில் நாற்று நட ரூபாய் 2750 ஆகும். இந்த இயந்திரத்தை இயக்க டிராக்டர் ஓட்டுனர் உடன் இயந்திரத்தின் பின் அமர்ந்து நாற்று போட இரு நபர்கள் தேவை. இந்த இயந்திரத்தின் விலை ரூ.90,000 ஆகும்.



**6. நாற்று நடும் இயந்திரத்திற்கான களையெடுக்கும் இணைப்பு**

நாற்று நடும் இயந்திர அமைப்பை மாற்றி

களை யெடுக்கும் கருவி மற்றும் உரம் இடும் கருவியையும் இவ்வியந்திரத்துடன் இணைத்துப் பயன்படுத்துவது இதன் முக்கிய சிறப்பியல்பாகும். இவ்வியந்திரத்தின் மூலம் 25 (அ) 30 செ.மீ. இடைவெளிகளுள்ள நெல் பயிர்களில் களையெடுக்க முடியும். சுழல்களையெடுக்கும் அமைப்பை அமர்ந்து ஓட்டிச் செல்லும் நாற்று நடும் இயந்திரத்துடன் இணைத்து 5 (அ) 7 வரிசைகளில் களையெடுக்கலாம். பயிர் இடைவெளிக்கு தகுந்தவாறு களை யெடுக்கும் அமைப்பினை நகர்த்திக் கொள்ளலாம் இந்த இயந்திரத்தைக் கொண்டு நாளொன்றுக்கு சுமார்1.5 எக்டர் வரை நெல் வயலில் களையெடுக்கலாம். மேலும் இவ்வியந்திரத்தை உபயோகிக்கும் பொழுது ஒரு எக்டருக்கு ஆகும் செலவு ரூ.2300/-




ஆகும். அதுமட்டுமின்றி ஆட்கள் மூலம் களையெடுப்பதை ஒப்பிடும் போது 90% நேரமும், 77% செலவும் மீதமாகிறது. இயந்திரகளையெடுப்பான் மூலம் களையெடுப்பதை ஒப்பிடும் போது 70 % நேரமும், 68% செலவும் மீதமாகிறது. இந்த களை யெடுக்கும் இயந்திர இணைப்பின் விலை ரூ.55,000/- ஆகும்.

### 7. டிராக்டரால் இயங்கும் இரு வரிசை முன் - பின் சுழலும் களையெடுக்கும் இயந்திரம்



டிராக்டர் மூலம் இயக்கப்படும் இரண்டு வரிசை முன்னோக்கு பின் நோக்கு ரோட்டா வேட்டர் களையெடுக்கும் இயந்திரம் உரு வாக்கப்பட்டுள்ளது. இது கரும்பு பயிரில் இடைச்சாகுபடி பணிகளுக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மண் உழவு இயந்திர மாகும். முன்னோக்கு இயக்கத்தில், இது இரண்டு வரிசைகளில் களையெடுக்கவும் மற்றும் மண் உழவு செய்யும் பணியையும் திறம்படசெய்கிறது. பின் நோக்கு இயக்கத்தில், கரும்பு பயிருக்கு தேவையான மண் அணைக்கும் பணியைச் செய்கிறது. கரும்பு வரிசை இடைவெளிக்கு ஏற்ப வேலை அகலத்தை மாற்றிக் கொள்ளும் வசதி இதில் வழங்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் செயல்திறன், முன்னோக்கு இயக்கத்தில் 85% மற்றும் பின் நோக்கு இயக்கத்தில் 80% ஆகும். இவ்வியந் திரத்தின் விலை ரூ.2,20,000/- ஆகும்.



### 8. வானூர்தி மருந்து தெளிப்பான்

வானூர்தி மருந்து தெளிக்கும் இவ்வியந் திரமானது நெல், கரும்பு, சோளம், பருத்தி மற்றும் பயறு வகை போன்ற பயிர்களில் மருந்து தெளிக்க உதவுகிறது. மணிக்கு 4 லிருந்து 5 கி.மீ வேகத்திலும் மற்றும் பயிரின் மேற்பரப்பிலிருந்து 1 மீ உயரத்திலும் பறக்கும் திறன் கொண்ட இவ்வகை டிரோன்கள் 4 மீ அகலம் வரை மருந்துகளை தெளிக்கவல்லதாகும். வானூர்தியிலுள்ள மருந்து தெளிக்கும் பெட்டியில் 10லி வரை தெளிப்பு திரவத்தை சேகரித்து வைத்துக் கொள்ளலாம். மேலும் இந்த இயந்திரமானது மின்கலன் மூலம் இயக்கப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிப்புமில்லை. குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில்மருந்துகளை தெளிக்க முடியும். இந்த இயந்திரத்தைக் கொண்டு நாளொன்றுக்கு சுமார் 16 ஏக்கர் வரை மருந்து தெளிக்கலாம். இதன் விலை ரூ.5,50,000 ஆகும்.

### ஒருங்கிணைந்த நெல் அறுவடை இயந்திரம்

தமிழ்நாட்டில் நெல் அறுவடை செய்ய பல்வேறு வகை ஒருங்கிணைந்த

இயந்திரங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சிறிய மற்றும் நடுத்தர நிலங்களுக்கு 50-60 குதிரைத்திறன் இயந்திரங்கள் ஏற்ற தாகவும், பரந்த நிலங்களுக்கு 70-80 குதிரைத்திறன் இயந்திரங்கள் சிறந்ததாகவும் உள்ளது. இந்த இயந்திரத்தைக் கொண்டு அறுவடை செய்யும் போது வைக்கோல் முழுமையாக துண்டாகாமல் வரும். அறுவடை செய்தல் கதிரடித்தல் மற்றும் தூற்றுதல் போன்ற வேலைகளை ஒட்டு மொத்தமாக ஒரே சமயத்தில் செய்து முடிக்கிறது. ஒருங்கிணைந்த நெல் அறுவடை இயந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் அறுவடைச் செயல்பாடுகளில் தேவைப்படும் வேலையாட்களின் எண்ணிக்கை பெரிதும் குறைக்கப்படுகிறது. அதே நேரத்தில் அறுவடை நேரம் சுமார் 60 - 70 சதவீதம் வரை குறைவதால் குறுகிய காலத்தில் பயிரை பாதுகாப்பாக அறுவடை செய்ய முடிகிறது. இந்த இயந்திரத்தைக் கொண்டு நாளொன்றுக்கு சுமார் 4 எக்டர் வரை அறுவடை செய்ய முடியும். இதன் விலை ரூ. 20,00,000 ஆகும்.



### 9. கரும்புகூட்டு அறுவடை இயந்திரம்

கரும்புகூட்டு அறுவடை இயந்திரம் நவீன கரும்பு சாகுபடியில் முக்கியமான தொழில் நுட்பமாகும். இந்த இயந்திரம் ஒரே நேரத்தில் கரும்பை வெட்டுதல், தோகை அகற்றுதல் மற்றும் துண்டாக்குதல் போன்ற பணிகளைச் செய்து, அறுவடை நேரத்தையும் தொழிலாளர் தேவையையும் பெரிதும் குறைக்கிறது. பொதுவாக இந்த இயந்திரத்தின் களத்திறன் மணி ஒன்றுக்கு சுமார்0.4-0.6 எக்டர் ஆகும். அறுவடை செலவை குறைத்து, ஒரு கரும்புகூட்டு அறுவடை இயந்திரத்தின் விலை சுமார் ரூ.90 லட்சம் முதல் 1.2 கோடி வரை இருக்கும் என்பதால், தனிநபர் விவசாயிகளைவிட தனியார் சேவை மையங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் மூலம் பயன்படுத்தப்படுவது இலாபகரமாக இருக்கும்.

### 10. வாழைத்தண்டு துண்டாக்கும் இயந்திரம்



வாழை அறுவடை முடிந்தபின், வயலில் மீதமிருக்கும் வாழை தண்டு, இலைகள் மற்றும் கழிவுகள் அடுத்த பயிர் சாகுபடிக்கு பெரிய தடையாக அமைகின்றன. இத்தகைய நிலையில், வாழைத் தண்டை தூளாக்கும் இயந்திரம் என்பது வயலை விரைவாக சுத்தம் செய்யவும், வாழை கழிவுகளை பயனுள்ள உயிர் உரமாகமாற்றவும் மிகவும் உதவிகரமான இயந்திரமாகும். இந்த இயந்திரம் வாழை மரத்தின் முழு தண்டையும் (வாழை தண்டு, இலைகள் உள்ளிட்டவை) சிறிய துண்டுகளாக வெட்டுகிறது. இதன் மூலம் வாழை கழிவு

மண்ணில் எளிதில் அழுகி, இயற்கை உரமாக மாறி மண்ணின் வளத்தை அதிகரிக்கிறது. இந்த இயந்திரம் நாளொன்றுக்கு 1.5 எக்டர் வரை இயங்கும் செயல் திறன் கொண்டதாகும். இதனால் குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவை சுத்தம் செய்ய முடிகிறது. வேலையாட்கள் தேவையை பெரிதும் குறைத்து, வயல் தயாரிப்பு செலவையும் குறைக்கிறது. இவ்வியந்திரத்தின் விலை சுமார் ரூ.1,00,000/- ஆகும்.

காவிரி டெல்டா மண்டலத்தில் நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்களின் சாகுபடியில் நவீன வேளாண் இயந்திரங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த பகுதியில் நிலவும் வேலை யாட்கள் பற்றாக்குறை மற்றும் பருவமழை சார்ந்த சாகுபடி சூழ்நிலைகளை எதிர்கொள்ள இயந்திரமயம் அவசியமாகிறது. நாற்று நடவு, துல்லிய விதை விதைப்பு போன்ற இயந்திரங்கள் காலதாமதமின்றி சாகுபடியை உறுதி செய்கின்றன.இடைச்சாகுபடி மற்றும் களையெடுப்பு இயந்திரங்கள் செலவையும் நேரத்தையும் பெரிதும் சேமிக்கின்றன. ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள் குறுகிய காலத்தில் பாதுகாப்பான அறுவடையை சாத்தியமாக்கு கின்றன.

கரும்புகூட்டு அறுவடை மற்றும் வாழை கழிவு மேலாண் இயந்திரங்கள் டெல்டா பகுதியில் அதிக பயன் தருகின்றன. டிரோன் மருந்து தெளிப்பு தொழில்நுட்பம் நீர் மற்றும் ரசாயன பயன்பாட்டை கட்டுப்படுத்த உதவுகிறது. பயிர் கழிவுகளை உயிர் உரமாக மாற்று வது மண்வளத்தை பாதுகாக்கிறது. சேவை மையங்கள் மூலம் உயர்மதிப்பு இயந்திரங்களை பயன்படுத்துவது சிறு விவசாயி களுக்கும் வாய்ப்பளிக்கிறது. ஆகவே, இந்த வேளாண் இயந்திரங்கள் காவிரி டெல்டா மண்டலத்தில் நிலைத்த, லாபகரமான வேளாண்மையை சாத்தியமாக்குகிறது.

தகவல் : *பா.சுதாகர், பெ.விவேக் மற்றும் இரா.கவிதா, பண்ணை இயந்திரவியல் மற்றும் சக்தி பொறியியல் துறை, வேளாண் பொறியியல் கல்லூரிமற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகம், கோயமுத்தூர்.*



# கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333